

பாமாலை 275A காற்றுத் திசை நான்கிலும்

1 காற்றுத் திசை நான்கிலும்
நின்றுலர்ந்த எலும்பும்
ஜீவன் பெறச் செய்யுமே,
வல்ல தெய்வ ஆவியே

2 ஈரமற்ற நெஞ்சத்தில்
பனி போல் இந்நேரத்தில்
இறங்கும், நல்லாவியே;
புது ஜீவன் தாருமே.

3 சத்துவத்தின் ஆவியே,
பேயை நித்தம் வெல்லவே
துணை செய்து வாருமேன்,
போந்த சக்தி தாருமேன்.

4 ஞானம் பெலன் உணர்வும்
அறிவும் விவேகமும்,
தெய்வ பக்தி பயமும்
ஏழும் தந்து தேற்றிடும்.

5 தந்தை மைந்தன் ஆவியே,
எங்கள் பாவம் நீங்கவே
கிருபை கடாட்சியும்,
சுத்தமாக்கியருளும்.